03.04.2025

O.S.No.463 of 2021

PW1 திருமதி. ஸ்ரீதேவி

சாட்சி வா.த.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

1. 17.06.2002 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.1

2. 14.06.2012 தேதியிட்ட பிரதிவாதி தன்னுடைய பொது அதிகார முகவர் மூலமாக வாதி பெயருக்கு எதிழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.2.

3. தாவா சொத்திற்கு ஆன்லை மூலம் பெறப்பட்ட பட்டா வா.த.சா.ஆ.3.

4. 05.10.2018 தேதியிட்ட எனது வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.த.சா.ஆ.4.

5. அந்த அறிவிப்பை பிரதிவாதி வாங்காமல் திருப்பி அனுப்பப்பட்ட 22.10.2018 தேதியிட்ட அஞ்சல் உறை வா.த.சா.ஆ.5.

6. 06.02.2019 தேதியிட்ட சொத்து வரி ரசீது வா.த.சா.ஆ.6

7. 06.02.2019 தேதியிட்ட மின் கட்டண ரசீது வா.த.சா.ஆ.7.

8. 01.08.2012 தேதியிட்ட வில்லங்ச்சான்றிதழ் வா.த.சா.ஆ.8.

9. 25.03.2015 தேதியிட்ட வில்லங்கசான்றிதழ் வா.த.சா.ஆ.9.

10. 14.06.2018 தேதியிட்ட பணம் செலுத்தியதற்கான ரசீதின் ஒளிப்பட நகல் வா.த.சா.ஆ.10. (அறிவார்ந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வா.த.சா.ஆ.10 ஒளிப்பட நகல் என்பதாலும் பணப் பற்று விவரம் வாதுரையில் சொல்லப்படாததாலும் இந்த ஆவணத்தை குறியீடு செய்யக்கூடாது என்று ஆட்சேபித்தார். (**வா.த.சா.ஆ.10 ஆவணமானது அதனுடைய நிருபமை மற்றும் தொடர்புடைமை பற்றி இந்திய சாட்சிய சட்டம் பிரிவுகள் 63, 65 மற்றும் 5க்கு உட்பட்டு குறியீடு செய்யபடுகின்றது**).

(அறிவார்ந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகின்றது)